ஈழமுரசு

# உணர்வாளர்களை முடக்க புதிய சட்டம்?

விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாக சிறீலங்காவினால் கூறப்பட்டு வந்தாலும், அவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அவ்வாறு இல்லை என்பதை உறுதிப்படுத்தி வருகின்றன. அவசரகாலச் சட்டத்தை நீக்க மறுத்து, தொடர்ந்து அதனை நீடித்துவரும் சிறீலங்கா, தற்போது தமிழர் தாயகப் பகுதிகளில் காவலரண்களை அமைத்து சோதனைகளையும் கெடுபிடிகளையும் அதிகரித்துள்ளது. கைதுகளும் விசாரணைகளும் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. அத்துடன், இராணுவத்தை பலப்படுத்தும் நடவடிக்கையிலும், போர்ப் பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கையிலும் அது தீவிரமாக இறங்கியுள்ளது.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் தொடர்பாக இந்தியாவும் அவசர அவசரமாக புதிய சட்டம் ஒன்றைக்கொண்டு வந்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடைச் சட்டத்தை கடந்த 20 வருடங்களாக இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை மீளவும் மீளவும் புதுப்பித்துவரும் இந்தியா, கடந்த வாரம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேலதிகமாக ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்துள்ளது. அவசர அறிவிப்பாக வெளியிடப்பட்ட இந்தச் சட்டம் தமிழின உணர்வாளர்களையே பாதிக்கும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஈழத் தமிழர்களை ஆதரிப்பவர்கள் மீது பல்வேறு கெடுபிடிகள் அச்சுறுத்தல்கள் இருக்கும் நிலையில், தற்போது விடுதலைப் புலிகளை ‘சட்டவிரோத அமைப்பாக’ கொண்டுவந்துள்ள புதிய சட்டமானது தமிழின உணர்வாளர்களின் செயற்பாட்டை மேலும் முடக்குவதற்கே வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறீலங்கா நடத்திய மிகக்கொடூரமான இன அழிப்புப் போரில் இந்தியாவின் பங்கு காத்திரமானது என்பது மறைக்கமுடியாத உண்மை. இதற்கான ஆதாரங்கள் பல ஏற்கனவே வெளிவந்துள்ளன. இதனைத் தற்போது சிறீலங்காவே ஒத்துக்கொள்ளவும் தொடங்கியுள்ளது. ஏற்கனவே நேரில் இறங்கி தமிழின அழிப்பு நடவடிக்கையை மேற்கொண்ட இந்தியா, தற்போது சிறீலங்காவுடன் கூட்டிணைந்து மறைமுகமாக நடத்திய இந்த இன அழிப்பு நடவடிக்கையானது மத்தியில் ஆளும் கட்சியின் மீது கடும் கோபத்தை தமிழின உணர்வாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதனால் கொங்கிரஸ் அரசுக்கு எதிராக பல்வேறு வடிவங்களிலான பிரச்சாரங்களும், குற்றச்சாட்டுக்களும் இந்த உணர்வாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனை அடக்குவதற்கான ஒரே வழியாக இந்தப் புதிய சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ளதாக கருதப்படுகின்றது.

‘தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தும், இலங்கையில் நிலவும் கொந்தளிப்பை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவு திரட்ட அதன் ஆதரவு அமைப்புகள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தி அமைதியற்ற நிலையை ஏற்படுத்தி, தமிழகத்துக்கு ஒரு பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளனர்’ என்று இந்தச் சட்டம் தொடர்பான அறிக்கையில் குற்றச்சாட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் விடுதலைப் புலிகளை ஆதரிப்போர் மீது மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுப்பதற்கும், காலவரையின்றி சிறைகளில் அடைப்பதற்கும் புதிய வழியொன்று திறந்துள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களின் ஒரே பாதுகாப்பாக இருந்த விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்கிய இந்திய மத்திய அரசு, தற்போது அவர்கள் மீதான அனுதாபிகளையும் ஒடுக்கும் கடும் நடவடிக்கையில் இறங்கியுள்ளமையே இந்தச் சட்டத்தின் வருகை உணர்த்தி நிற்கின்றது. ஏற்கனவே, கொங்கிரஸ் அரசு மீது வெறுப்படைந்து வரும் உணர்வாளர்களுக்கு, இந்தச் சட்டம் மேலும் வெறுப்பை அதிகரிக்கவே வழிவகுக்கும். இந்தியாவை அரவணைத்துச்செல்ல விரும்பும் தமிழ் மக்களையும் இது வேதனை கொள்ளச் செய்யும் ஒரு செயலாகவே இருக்கின்றது.

# மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ்க்கு எதிராக குரல் கொடுப்போம்

## – தமிழீழ எதிலிகள் பேரவை –

சிறீலங்காவின் இராணுவத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தற்போது ஜேர்மனியின் தூதரக நடவடிக்கை என்ற பெயரில் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையில் தமது வெளிநாடுகளில் துணை இராணுவக் குழுக்களுடன் இணைந்து இறங்கியுள்ளார். இந்நிலையில், இவருக்கு எதிராகக் குரல் கொடுக்க வருமாறு தமிழீழ எதிலிகள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, சிங்கள பௌத்த பேரினவாத அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்திய இன அழிப்புப் போரைத் தொடர்ந்து புலம்பெயர் தமிழர்களுக்கு எதிரான இராசதந்திரப் போரைத் தீவிரப்படுத்தியுள்ளது. தாயக விடுதலைக்கான களம் புலம்பெயர் தமிழுறவுகளின் கைகளுக்கு மாறியுள்ளதை அரசும் நன்கு உணர்ந்துள்ளது.

இதை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடடிவக்கைகளை அது மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. இன அழிப்புப் போரில் போர்க் குற்றங்கள் புரிந்த இராணுவத் தளபதிகள் இராசதந்திரத் தூதுவர்களாகவும் துாதரக அதிகாரிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர். இந்த நியமனம் இரு வகை முக்கிய இலக்குகளைத் கொண்டிருக்கிறது.

போர்க் குற்றவாளிகளை இராசதந்திரிகளாக மாற்றும் போது அவர்களுக்கு இராசதந்திர விதிமுறைகளின் படி பாதுகாப்புக் கிடைக்கிறது. தூதரகத்தில் அமர்ந்தவாறு புலம்பெயர் தமிழர்களுக்கு எதிரான பாரதூரமான நடவடிக்கைகளை இவர்களால் மேற்கொள்ள முடியும். மனித நேயப் பணியாளர்களைக் கண்காணிப்பதற்கும் அவர்களை பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கும் அரிய வாய்ப்பு ஏற்படுகிறது.

தூதுவர் நியமனத்திற்கு முன்பாக இவர்களுக்கு சிறிலங்கா அரசு வழங்கும் முக்கிய பணிப்புரை பற்றிய செய்தி எமக்கு எட்டியுள்ளது. புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் விடுதலை உணர்வும் தாயகப் பற்றும் உச்ச நிலையில் இருக்கின்றன. விடுதலைப் போர் முற்றாக நிறுத்தப்படவில்லை புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழுறவுகள் மனதில் அது தணியாத தாகமாக இருக்கிறது. உங்களால் இயன்ற மட்டிற்கு விடுதலை உணர்வை முடக்கும் நடவடிக்கையை தீவிரமாக மேற்கொள்ளுங்கள்.

இந்தப் பணிப்புரைக்கு அமைவாக சிறிலங்காவின் வெளிநாட்டுத் தூதரகங்கள் தோறும் தமிழர்களுக்கு எதிரான பரப்புரைகளும் இடையூறுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் முடக்கிவிடப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களாக எமது மனித நேயச் செயற்பாட்டாளர்கள் கைதுசெய்யப்படுவதற்கும் சிறையில் இடப்படுவதற்கும் இதுதான் காரணம்.

சிறிலங்காவில் அரசியல் இராணுவ மயமாகியுள்ளது. அதன் இராணுவமோ அரசியல் மயமாகி உள்ளதோடு இராசதந்திரத் துறையுமாகியுள்ளது. இது சென்ற நூற்றாண்டின் அதிபர் ஜெயவர்த்தனா காலத்தில் ஆரம்பித்த சிங்களப் பேரினவாதப் பாரம்பரியமாகும். ஜெயவர்த்தனா தமிழர் படுகொலையை பெருமளவில் கச்சிதமாகச் செய்தவர்களுக்கு வெகுமதிகளை வழங்கினார். இதன் காரணமாக இராசதந்திர பதவி கிட்டும் என்ற எதிர்பார்ப்பில் இராணுவத்தினர் இன அழிப்பைத் தீவிரப்படுத்தினர்?. ஜெயவர்த்தனா செய்த முதல் நியமனம் கடும் தோல்வியில் முடிந்தது. அவருடைய மிக நெருங்கிய உறவினரும் யாழ்பாணத்தில் இன்பன் போன்ற விடுதலை வீரர்களை கடுஞ் சித்திரவதை செய்து படுகொலை செய்தவனுமாகிய புல் வீரத்துங்கா என்ற இராணுவத் தளபதியைக் கனடாவுக்கான தூதுவராக நியமித்தார். கனடாத் தமிழர்கள் கொதித்தெழுந்து கடும் போராட்டத்தில் குதித்தனர்.

இதை அவதானித்த கனடா அரசு நாங்கள் இந்த அதிகாரியை படிப்படியாகச் செயலிழக்கச் செய்து வெளி யேற்றுவோம். உங்கள் போராட்டம் நியாயமானது. அதை இப்போதைக்கு நிறுத்தி வையுங்கள் போராட்டம் நிறுத்தப்பட்டது. தூதுவரும் வெளியேற்றப்பட்டார். இந்த வகையில் கனடா முன்மாதிரியான நாடு.

மணலாறு தமிழர்களை வெளியேற்றிச் சிங்களக் குடியேற்றம் செய்வதற்காக பல அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்தவரும், செம்மணிப் படுகொலைகள் போன்றவற்றிற்குப் பொறுப்பானவனுமான ஜனக பெரேராவை அதிபர் சந்திரிக்கா அவுஸ்ரேலியாவுக்கான சிறீலங்காத் தூதுவராக நியமித்தார். அவுஸ்ரேலியாத் தமிழர்கள் மாத்திரமல்ல அவுஸ்ரேலியா மைய அரசின் எதிர்க் கட்சிகளும் ஜனக பெரேராவுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.



சுவிசில் நடைபெற்ற சந்திப்பொன்றில் ஜெகத் டயசுடன், ஒட்டுக்குழு உறுப்பினர் ஒருவர்.

**எனவே சர்வதேச நீதி மன்றத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட வேண்டியவர் தான் ஜேர்மனிக்கான துணைத் தூதுவர் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ். இவர் போன்ற இன்னும் சிறிலங்காவில் இருந்து தூதுவர் நியமனம் பெற்று வெளி வரும் சாத்தியங்கள் இருக்கின்றன. அதற்கு முன்னர் மேஜர் ஜெனரல் ஜெகத் டயசை வெளியேற்றும் நடடிக்கைக்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்.**

சர்வதேச அபய ஸ்தாபனம் ஜனக பெரேராவின் நியமனத்திற்கு எதிரான அறிக்கைகளை வெளியிட்டது. போர்க் குற்றவாளியை அவுஸ்ரேலியா எப்படித் தூதராக வரவேற்க இணங்கியது என்ற கேள்வியை அது சர்வதேச மட்டத்தில் எழுப்பியது. இறுதியில் ஒரு குறுகிய காலம் அவுஸ்ரேலியாவில் பதவி வகித்த பின் ஜனக பெரேரா இராணுவ ஆட்சி நிலவும் இந்தோனேசியாவுக்குப் பணி மாற்றம் பெற்றுச் சென்றார்.

சிறிலங்கா இராணுவம் கிளிநொச்சியைக் கைப்பெற்றுவதற்கான நடவடிக்கைக்குத் தலைமை தாங்கிய 57ம் படையணியின் தளபதியாகச் செயற்பட்ட மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் இப்போது ஜேர்மனியில் சிறிலங்காத் துணைத் தூதராகப் பதவி வகிக்கிறார். இவர் ஒரு போர்க் குற்றவாளி. எப்படி இவருடைய நியமனத்தை ஜேர்மனி ஏற்றுக் கொண்டதோ தெரியவில்லை.

(10ம் பக்கம் பார்க்க)